[2016 பிப்ரவரி 20

95—

சார்பு நீதிமன்றம்

***34057—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், திருமங்கலத்திலுள்ள முகாம் சார்பு நீதிமன்றத்தினை சார்பு நீதிமன்றமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் வாழும் மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, திருமங்கலத்தில் ஒரு புதிய சார்பு நீதிமன்றம் அமைக்க ரூபாய் 71,15,359 ஒப்பளிப்பு செய்து, அரசாணை எண் 977, உள் துறை, நாள் 29—12—2015—ல் ஆணை வெளியிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விதி எண் 110—ன்கீழ், திருமங்கலத்தில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்க அறிவிப்பு வெளியிட்டு, ரூ.37,18,548/— ஒப்பளிப்பு செய்து அரசாணை எண் 772, உள் துறை, நாள் 28—10—2015—ல் ஆணை வெளியிட்டுள்ளார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

2016 பிப்ரவரி 20]

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உரிமைகளையெல்லாம் சட்டப் போராட்டம் நடத்தி, வென்று காட்டிய நீதியின் காவலர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடுவதில் நீதிமன்றத்தின் வாயிலாக வெற்றி பெற்றார்கள். முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி உயரத்திற்கு நீர் தேக்கிக் கொள்ளலாம் என்ற உரிமையை நீதிமன்றத்தின்மூலம் வெற்றிபெற்று வந்தார்கள்.

திருமங்கலத்திலுள்ள வழக்கறிஞர்களும், பகுதிவாழ் பொதுமக்களும் அங்கு இருக்கின்ற நீதிமன்றத்தினை சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரி வந்தனர். அந்தக் கோரிக்கையினை நிறைவேற்றுகிற வகையில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு வந்தவுடன், திருமங்கலத்திலுள்ள நீதிமன்றத்தை சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தியும், கூடுதலாக மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை வழங்கியும், திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட பேரையூரிலே ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை வழங்கியும் பெருமை சேர்த்திருக்கிற இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, தொகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமங்கலம் நகரத்திலே இருக்கக்கூடிய சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என இரண்டும் சேர்ந்து 100 ஆண்டுகள் பழமை கொண்ட ஒரு கட்டடத்தில் இருக்கின்றன. அங்கு ஏராளமான இடவசதி உள்ளது. எனவே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தினைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விரைவில் நீதி கிடைக்க வேண்டுமென்ற உயர்ந்த

நோக்கத்துடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இதுவரை 451 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனை படைத்துள்ளார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே வெறும் 363 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் 214 புதிய நீதிமன்றங்கள் 155 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் 119 புதிய நீதிமன்றங்கள்தான் ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரையூர் நீதிமன்றத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதியைப் பெற்றுத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சாதனையாக 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, இன்று அனைத்து நீதிமன்றங்களும் சிறப்பான*

2016 பிப்ரவரி 20]

முறையில் செயல்பட வழிவகை வகுத்துள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சரோஜா அவர்கள்.*

திருமதி பெ. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 68 ஆம் ஆண்டு பிறந்த நாளில் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், வாழப்பாடியில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கிட்டத்தட்ட 214 புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் ஒன்றாகக்*

செயல்பட்டபோது, கிருஷ்ணகிரியிலே மாவட்ட முதன்மை நீதிமன்றம் செயல்பட்டு வந்தது. 2004–ல் கிருஷ்ணகிரி, தருமபுரி எனப் பிரிக்கப்பட்டபின், தருமபுரியிலே Sub–Court–ல் மட்டுமே இன்று வரை முதன்மை நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. புதியதாக ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பணிகள் கடந்த இரண்டு ஆண்டுகாலமாக துவங்கப்படவில்லை. பெரும்பாலான வழக்கறிஞர்களும், பொதுமக்களும் அந்தக் கட்டடம் எப்போது கட்டப்படும், எப்போது பணி துவங்கப்படும் என்று பரவலாகக் கேட்கின்றனர். எப்போது அந்தப் பணி துவங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மேலும், மாவட்டங்களிலே வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து, வழக்குகள் நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில் தருமபுரியிலே வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகளைத் தனியாக நடத்துவதற்கான சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, இப்பொழுது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. உடனடியாகப் பணிகள் துவங்கப்படும். எந்த நீதிமன்றம் அமைப்பதானாலும், அதற்கு உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வர வேண்டும். உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வருகின்றபட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

திரு. இரா. குமரகுரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கறிஞர்கள் எல்லாம் கடந்த 20 ஆண்டுக்காலமாக சார்பு நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்துள்ளனர். அங்கே சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு, உயர் நீதிமன்றத்திலிருந்து அனுமதி வழங்கி, அனைத்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர். உளுந்தூர்பேட்டையிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே இருக்கிற வழக்கறிஞர்களும், பொதுமக்களும் விழுப்புரம் சென்று, சார்பு நீதிமன்றத்திலே வழக்காடுவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, உளுந்தூர்பேட்டையிலே ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் வசதியாக இருக்கும். ஏற்கெனவே, விழுப்புரத்திலே 4 சார்பு நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆகவே புதிதாக இல்லையென்றாலும்கூட இருக்கின்ற 4 சார்பு நீதிமன்றங்களில் ஒரு சார்பு நீதிமன்றத்தை உளுந்தூர்பேட்டைக்கு ஒதுக்கிக் கொடுத்தால், அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மிக விசுவாசமாக இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதி ஆண்டிலே உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்பு நீதிமன்றம் கேட்டிருக்கின்றார்கள். அந்த மாவட்டத்தில்

இருக்கக்கூடிய Bar Council மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை அனுப்பப்பட்டு, உயர் நீதிமன்றத்தின்மூலம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றத்திலிருந்து வருகின்ற பரிந்துரைகள் அத்தனையும் ஏற்று, இன்றைக்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். சிறப்பான முறையிலே நீதிமன்றங்கள், நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பரிந்துரைகள் வருகின்றபட்சத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், மதுரை மாவட்ட நீதிமன்றம் துவங்கப்பட்டு, அதற்கான கட்டடம் 1968–லே கட்டப்பட்டு, நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது இருக்கின்ற மக்கள் பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு, கூடுதல் நீதிமன்றங்கள் தேவை என்று அந்த மக்கள் கேட்டு வருகிறார்கள். எனவே, கூடுதல் நீதிமன்றமும், கூடுதல் வசதிகளும் பெற்றுத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தாங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், இன்றைக்கு சாதனையாக 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதி குடியிருப்புகள், அடிப்படை வசதிகள் என அனைத்தும் உருவாக்கியுள்ளார்கள். ஆகவே, அங்கே இருக்கக்கூடியவர்களின் கோரிக்கை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து அரசுக்கு பரிந்துரை*

2016 பிப்ரவரி 20]

வருகின்றபட்சத்தில், கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், நெய்வேலியில் இருக்கின்ற குற்றவியல் நீதிமன்றம் என்.எல்.சி. இடத்தில் இருப்பதால், அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று என்.எல்.சி. நிருவாகம் சொல்லி வருகிறது. ஆகவே, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், வடக்குத்து கிராமத்தில் போதிய இடம் இருக்கின்ற காரணத்தினால், அந்தக் குற்றவியல் நீதிமன்றத்தினை வடக்குத்து கிராமத்தில் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நீதிமன்றத்திற்குரிய இடம் இருக்கின்றபட்சத்திலே, உயர் நீதிமன்றத்தின் குழு அங்கே சென்று பார்த்து, அந்த இடம் சரியான இடம் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குப் பரிந்துரை செய்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். ஆத்தூர் தொகுதியில் ஒரு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், ஆத்தூர் தொகுதியில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிபதிகள் மன்றமும் அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை வருகின்றபட்சத்திலே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். நிதிநிலைக்கேற்ப கண்டிப்பாக அது அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீதிமன்றம் சார்ந்த கேள்வி இல்லை. இருந்தாலும், வேறு வாய்ப்பில்லாததால் இன்று கேட்கின்றேன். சென்னைக் குடிநீர் வடிகால் வழங்கல் வாரியத்தின் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றிய கேள்வி இது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வினாவில் சென்னைக் குடிநீர் வடிகால் வழங்கல் வாரியத்தின் கேள்வி பற்றி கேட்கிறீர்களே?

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் சொல்லிவிட்டேன். மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்ட கேள்வி இல்லையென்றுதான் நான் முன்பே சொல்லிவிட்டேன்.

2016 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வேண்டாம், அப்படியென்றால் உட்காருங்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். எனவே, அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, கேளுங்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக் குடிநீர் வடிகால் வழங்கல் வாரியத்தின் ஊழியர்களின் நீண்டநாள் கோரிக்கை; மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட மனு கொடுக்கப்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வழங்கு வாரியத்தில் கடந்த 20 ஆண்டுகளாகப் பணிபுரியும் ஒப்பந்த ஊழியர்கள் நாள் ஒன்றுக்கு ரூபாய் 140 வாங்குகிறார்கள். அதேபோல் 42 உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து இணைக்கப்பட்டு சென்னைக் குடிநீர் வடிகால் வழங்கு வாரியத்தில் அவர்கள்* daily wages–*ல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும். ஏனென்றால், ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளில் அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள். எனவே, இந்த இரண்டு கோரிக்கைகளையும் கனிவோடு பரிசீலித்து, அவர்களுக்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை, சென்னை பெருநகரக் குடிநீர் வடிகால் வாரியம் சார்ந்தது. அந்த நிருவாகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகமான நிருவாகிகளுக்கு இன்றைக்குப் பணி, பதவி உயர்வு போன்றவையெல்லாம் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2016 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பரங்கிப்பேட்டை பேரூராட்சியில் இயங்கி வரும் சார்பு நீதிமன்றம் பழைய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கை தொடர்பாக, உயர் நீதிமன்றத்திலிருந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குப் பரிந்துரை வருகின்றபட்சத்தில், அங்கு தேவையான வசதிகள், இடம், சுற்றுச்சூழ்நிலை இருக்கின்றபட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

96—

கால்நடைக் கிளை நிலையம்

***61176—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றம் எதிர்புறம் இருக்கும் கால்நடைக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?